UNIVERSITY ★ LIBRARY ★ 1979-8-10 PERIODICALS DIVISION


**இறக்குமதி செய்யப்பட்ட**

ஃ பலவித பரிசுப் பொருட்கள்.
அழகு சாதனப் பொருட்கள், தையல் வேலைகளுக்குரிய சகல பொருட்கள்.
மற்றும்
ஃ யப்பான் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பல தரங்களிலுமுள்ள காதுகேட்கும் கருவிகள் யாவற்றையும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்.

**கிருபா கிவ்ற் கவுஸ்**
KIRUBA GIFT HOUSE
சோதிடவிலாஸ் கட்டிடம்
46, பெரியகடை- யாழ்ப்பாணம்
தொலைபேசி: 8083



பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
# The EELANADU

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under No QB/8945/78

மலர் 21 ஆடி 25 தம்பூரான் 16 இதழ் 179

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 10-8-79



INSTITUTES
THIRUNELVELY JUNCTION

5-8-79 இல் ஆரம்பமாகின்றன

1. SHORT HAND and TYPING
2. பரதநாட்டியம், வயலின், மிருதங்கம், வீணை, புல்லாங்குழல்
3. சங்கீதம், திருமுறை [தேவாரம்] பண்பயிற்சி நெறி
4. G. C. E. (A/L) வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம்

புதிய மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

விபரங்கட்கு:-
V. M. PAKKIANATHAN.


யாழ். மாநகரசபைக்குரிய

## ரூ. 7,000 பெறுமதியான உதிரிப்பாகங்கள் திருட்டு!

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண மாநகரசபைக்குச் சொந்தமான சுமார் ஏழாயிரம் ரூபா பெறுமதியான டிராக்டர் உதிரிப் பாகங்கள் திருட்டுப்போயுள்ளன.

இந்த டிராக்டர் அண்மையில் வாங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இது பற்றிப் பொலிஸாருக்குப் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து மாநகரசபை ஊழியர் சிலர் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இத்திருட்டு இரவில் நடைபெற்றிருக்கலாமெனவும் கூறப்படுகிறது. [அ]

## ஓடு பிரித்து கோயிலில் திருட முயற்சி

### சண்டிலிப்பாயில் சம்பவம்

[யாழ்ப்பாணம்]

இரண்டு ஆலயங்களுக்குள் ஓட்டைப் பிரித்துப் புகுந்த வாலிபர் கோஷ்டியொன்று, அங்குள்ள மூலஸ்தான விக்கிரகத்தைப் பெயர்த்து, மந்திரக் காடுகளை எடுத்து வீசி, அங்குள்ள உண்டியல்களைச் சேதப்படுத்தியதாகவும், விலையுயர்ந்த பொருட்கள் எதுவும் அகப்படாத நிலையில் தப்பியோடிவிட்டதாகவும் கூறப்படுகிறது.

இச்சம்பவங்கள் ஒரே இரவில் சண்டிருப்பாய்ப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது குறித்துச் சம்பந்தப்பட்ட ஆலயத் தர்மகர்த்தா சபையினர் சங்கானைப் பொலிஸில் செய்துகொண்ட முறைப்பாட்டையடுத்து பொலிஸார், இக்கோவில்களுக்கு அண்மையிலுள்ள தோட்டமொன்றில் ஐந்து இளைஞர்களைச் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்து விசாரணைக்குட்படுத்தியுள்ளனர். [செ]

பஸ்களில் செப். முதலாம் திகதி தொடக்கம்

# புகைத்தல் தடை கடுமையாக அமுல்

## மிதிபலகை பிரயாணிகளும் தண்டனைக்குள்ளாவர்

[கொழும்பு]

பஸ்களில் புகைப்பவர்கள் மீது கடும்நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது.

பஸ்களின் மிதிபலகைகளில் நின்று கொண்டு பிரயாணம் செய்வதற்கு இருந்து வரும் தடையும் கடுமையாக அமுல் நடத்தப்படவிருக்கிறது.

பஸ்களில் புகைப்பதற்கு இருந்துவரும் தடையைக் கடுமையாக செயல்படுத்த முடிவு செய்திருப்பதாக இலங்கை போக்குவரத்துச் சபைத் தலைவர் அறிவித்திருக்கிறார். மிதிபலகைகளில் நின்று கொண்டு பிரயாணம் செய்வதற்கு இருந்துவரும் தடையும் கடுமையாக அமுல் நடத்தப்படும் என்று அவர் அறிவித்துள்ளார்.

இது பற்றி பொலிஸ்மா அதிபருடனும் இ. போ. ச அதிகாரிகள் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளனர்.

பஸ்களில் புகைப்பவர்கள் அல்லது மிதிபலகைகளில் பிரயாணம் செய்பவர்களை பஸ் நடத்துநர்கள் அவ்வாறு செய்யவேண்டாமெனக் கேட்டுக்கொள்வர். இதற்குச் சம்மதப்பட்ட பிரயாணி செவிசாய்க்காதுபோனால் பஸ்ஸை அருகிலுள்ள பொலிஸ்நிலையத்திற்குக் கொண்டுசென்று பொலிஸாருக்கு அறிவிப்பர். சம்பந்தப்பட்ட பிரயாணிக்கு ரூபா 200 வரை அபராதம் விதிக்கப்படலாம்.

இ. போ. ச. தலைவரின் இத்திட்டம் செப்டம்பர் முதலாம் திகதியிலிருந்து அமுலாகும். [ம]

# தமது அலுவலகத்திலும் திடீர் சோதனை நடக்கிறதாம்

### வடமாநிலக் கல்வி அதிபதி சொல்கிறார்

(யாழ்ப்பாணம்)

"கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ள பரிசோதனை குழு பாடசாலைகளுக்கு மட்டுமல்ல கல்வி அதிபதியின் அலுவலகத்துக்கும் விஜயம் செய்து நிர்வாகங்கள் சரியாக நடைபெறுகிறதா எனமேற்பார்வை செய்து வருகிறது"

இவ்வாறு வடமாநில கல்வி அதிபதி திரு. தி மாணிக்கவாசகர் உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலயப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

வித்தியாலய அதிபர் திரு. வி. அரியநாயகம் தலைமையில் நடைபெற்ற இப்பரிசளிப்பு விழாவில் திரு. மாணிக்கவாசகர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"எமது நாட்டின் வரவு செலவுத் திட்டத்தில் கல்விக்கென நூற்றுக்கு இருபது வீதத்தின் அரச ஒதுக்கீயுள்ளதுடன் இப்பணம் சரியான முறையில் செலவு செய்யப்படுகின்றதா என்பதை அவதானிக்க ஒரு பரிசோதனைக் குழுவையும் நியமித்துள்ளது. இக்குழு பாடசாலைகளுக்கு திடீர் விஜயம் செய்து ஆசிரியர்களை நேரத்துக்குப் பாடசாலைக்கு வந்து, வகுப்பு நேரங்களில் வீண்பொழுது போக்காமல் தமது வகுப்புகளில் உரிய கடமைகளைச் செய்கின்றார்களா, வசதிக்கட்டணம் ஒழுங்காகச் செலவழிக்கப் படுகின்றதா முதலானவற்றைப் பரிசோதித்து வருகின்றது. இப்பரிசோதனைக் குழு பாடசாலைகளுக்குத் திடீர் விஜயம் செய்து மேற்குறிப்பிட்ட விஷயங்களை ஆராய்வதை ஒருசில அதிபர்

[6பக்கம் பார்க்க]


**மக்கினொன் டிரவல் சேவிஸ் (இலங்கை) லிமிட்டெட்**

**Mackinnon Travel Service (Ceylon) Ltd**

தங்களது கிளை ஸ்தாபனத்தை யாழ்ப்பாணத்தில் 8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் நிறுவி இயங்கி வருகிறது.

இங்கு
- உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட்
- அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் டிறவலர்ஸ் செக்
- சுற்றுலாக்கள்
- பாஸ்போட்
- விசா

இப்படி எல்லாவசதிகளையும் கொழும்புக்கு செல்லாமலே ஒழுங்கு செய்துகொள்ளலாம்.

உங்கள் பிரயாண ஒழுங்குகளை மக்கினொன் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட் ஸ்தாபனத்திடம் ஒப்படையுங்கள்.

**மக்கினொன் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்,**

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 8154

பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது!


## "அரசுக்கு அபகீர்த்தி வராமல் நடந்துகொள்க"

[யாழ்ப்பாணம்]

அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட இயக்குநர்சபை உறுப்பினர்களால் நிர்வகிக்கப்பட்டு வந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தற்போது பொது மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களால் நிர்வகிக்கப்படும் முறையை அரசு மீண்டும் செயல்படுத்திவருகிறது என்று கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இணைக்குழு உறுப்பினர்களுக்கான கூட்டத்தில் யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு எஸ் ஞானப்பிரகாசம் பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

அரச விரோத சக்திகள் மக்களால் தெரிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் செய்யும் சிறிய தவறுகளையும் பெரிதுபடுத்திக்காட்டத் தயாராக இருக்கின்றன. இயக்குநர் சபை உறுப்பினர்கள் சரியான முறையில் சங்கத்தை நிர்வகித்து அரசாங்கத்திற்கு அபகீர்த்தி ஏற்படாதவாறு காத்துக்கொள்ளவேண்டும்.

கூட்டுறவுச்சங்கக் கிளை முகாமையாளர்களும் சபை உறுப்பினர்களும் ஒற்றுமையாகவும் நேர்மையாகவும் இயங்கவேண்டும். இவ் உறுப்பினர்கள் எக்காரணங்கொண்டும் சலுகைகளை எதிர்பார்க்கக் கூடாது. சலுகைகளை எதிர்பார்க்கும்போதுதான் பிரச்னைகள் உருவாகின்றன.

இணைக்குழு உறுப்பினர்களாகிலுஞ்சரி, இயக்குநர்சபை உறுப்பினர்களாகிலுஞ்சரி மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களே. மக்களால் தெரிவு

[6-ம் பக்கம் பார்க்க]

## யாழ். மாவட்ட மாணவர்களின் சாதனை!

[கொழும்பு]

கடந்த வருடம் விவேகானந்த சபையினரால் 22 கல்வி மாவட்டங்களுக்கிடையில் நடாத்தப்பட்ட 49வது ஆண்டுச் சைவசமய பாடப் பரீட்சையில், பல்கலைக்கழகப் புலமைப் பரிசில்கள் மூன்றையும் யாழ். கல்வி மாவட்டம் பெற்றுள்ளது.

பரிசு பெற்ற அம்மூவரின் விபரம் வருமாறு:

முதலாமிடம்: செல்வன் கோபிநாத் சந்திரசேகரம், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.

இரண்டாமிடம்: செல்வன் முகுந்தன் குமாரசாமி, யாழ். இந்துக்கல்லூரி.

மூன்றாமிடம்: செல்வி பிரியதர்சினி பாலேந்திரா" யாழ். இந்து மகளிர் கல்லூரி [செ]

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நூறு கோழி வளர்க்கக் கூடிய பாவித்த கோழிக்கூடு கழட்டிய நிலையில் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: S திருநாவுக்கரசு, 213, கண்டி வீதி, அரியாலை (மின்நிலைய முன்பாக) 3255

6 இறி தொடர்பிலக்கமுள்ள Italion D L ஸ்கூட்டர் சனிக்கிழமை பார்வையிடலாம் 466/4, சென் பேரக்ஸ் சேச்லேன், கண்டிக்குளி. 3263

### ஏகமனதாகத் தெரிவு

[புலோலி]

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபையின் பணியாளர் பிரதிநிதியாக திரு. சோ. அருணகிரி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கணக்காளராகப் பணியாற்றி வரும் இவர் கூட்டுறவுத்துறையில் நீண்டகால அனுபவம் உடையவர் என்பது குறிப்பிடத்தக்கது. [அ]

## உயர்தர பரீட்சை

அத்துடன் கடந்த அரசாங்கத்தால் எச் என் சி ஈ என நடைமுறைப்படுத்தப்பட்டுவந்த உயர்தரப் பரீட்சை முற்றாக ஒழிக்கப்பட்டு புதிய திட்டத்தின் கீழ் தோற்றும் க பொ த உயர்தர மாணவர்களும் இன்று ஆரம்பமாகும் க பொ த உயர்தர பரீட்சைக்குத் தோற்றுகிறார்கள் இம்மாதம் 27ந் திகதி வரை நடைபெறும் இப்பரீட்சையில் 33,000 பரீட்சார்த்திகள் தோற்றுகின்றார்கள். (இ)

### அரச மரக் கூட்டுத்தாபனம்

## பகிரங்க ஏல விற்பனை

திருநெல்வேலி அரச மரக் காலையில் 9 குவியல் பாலையாவறனைக்குத்தி மரங்கள் 79-08-13-ந் திகதி காலை 10-00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

இ பொன்னம்பலம்,
முகாமையாளர்,
அரச மரக் கூட்டுத்தாபனம்,
யாழ்ப்பாணம்.

1979-08-08. 3262

### இளைஞர்களுக்கு

## சுன்னாகத்தில் மரவேலைப் பயிற்சி

[யாழ்ப்பாணம்]

ஓட்டுப்பலகைக் கூட்டுத்தாபனத்தினால் இதுவரைகாலமும் இயக்கப்பட்டுவந்த சுன்னாகம் மரவேலைத் தொழிற்சாலையை யாழ் கச்சேரி சிறுகைத்தொழில் திணைக்களம் பொறுப்பேற்றுள்ளது.

பொறுப்பேற்கப்பட்டுள்ள இத் தொழிற்சாலையை மரவேலைப் பயிற்சிப் பாடசாலையாக நடாத்த சிறுகைத்தொழில் திணைக்களம் முடிவு செய்துள்ளது.

இப் பயிற்சிப்பாடசாலையில் இயந்திரமூலமும், கைமூலமும் மரவேலைகளை ஒரு வருடத்திற்குப் பயிற்றுவிப்பதெனவும் இம் பயிற்சிக்கு 8ம் வகுப்புச் சித்தியடைந்த 14 முதல் 21 வயதுடைய, ஆண்டொன்றுக்கு 24 பேர் மட்டுமே தெரிவுசெய்யப்படுவர் என்றும் பயிற்சிபெறும் காலத்தில் இவர்களுக்கு வேதனம் வழங்குவதெனவும் திணைக்களம் முடிவுசெய்துள்ளது. (கா)

## "ஆற்றலையும் துணிவையும் தருவது விளையாட்டுப்போட்டி"

[யாழ்ப்பாணம்]

"சிறந்த சிந்தனையும், அறிவு வளர்ச்சியும் மட்டும் போதாது சிந்தனையைச் செயற்படுத்தக் கூடிய ஆற்றலும், துணிவும் நமக்கு அவசியம். ஆற்றலையும், துணிவையும் நமக்களிப்பது விளையாட்டுப் போட்டிகளே."

இவ்வாறு நேற்று முன்தினம் இருபாலை எக்ஸ்பிரஸ் இளைஞர் கழகம் கூட்டில் இயக்குநர் திரு வரதராஜா தலைமையில் நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் விரிவுரையாளரும், கவிஞருமான திரு. இ. முருகையன் கூறினார்.

அவர் தொடர்ந்து தமதுரையில், "கல்வியென்பது வாழ்க்கைக்கு ஆயத்தமாகின்ற நிலை என்பர். அது அறிவை விருத்தியாக்கும். பரீட்சைகள் சித்தியடையமட்டுமே என்று கருதும் சிலர், இத்தகைய விளையாட்டுப் போட்டிகள் தேவையா? என வினா எழுப்புகின்றனர்.

நமக்கு அறிவும், சிந்தனை ஆற்றலும் அவசியம். அதே சமயம் நமது சிந்தனையாற்றலைச் செயற்படுத்தும் மனத்திடமும் உடல் வலுவும் நமக்கு விளையாட்டுக்களாலேயே கிடைக்கின்றன.

"ஒருவனுக்குக் கல்வியறிவு மட்டுமல்ல, செயல் திறனும் வேண்டுமென்பதைத்தான் வள்ளுவர்கூட 'கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத்தக' என்றான். நாம் கற்க கல்விக்கேற்ப செயல்களை திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று வலியுறுத்துகிறான்.

"மாணவர்களிடம் இலட்சியமும் குறிக்கோளும் இருக்க வேண்டும். இலட்சியமில்லாதவன் வாழ்வு செம்மையானதாக சிறப்பானதாக அமையாது. உள்ளத்தில் இலட்சியத்தை உருவாக்கும் ஊக்கத்தை விளையாட்டுப் போட்டிகள் தரும்."

இயக்குநர் திரு. வரதராசா பேசுகையில் "ஒருவரோடு ஒருவர் போட்டிபோடலாம். பொறாமை கொள்ளக்கூடாது என்பதை விளையாட்டுப் போட்டிகள் நமக்குப் புலப்படுத்துகின்றன" என்றார். [எ-கு]

## விளையாட்டு மைதானம் விஸ்தரிப்பு

(சித்தன்கேணி)

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் விளையாட்டு மைதானம் மேலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது

இக்கல்லூரிக்குச் சொந்தமான பதினொரு பரப்புக் காணியுடன் இதற்கருகே அமைந்திருந்த தனியாருக்குச் சொந்தமான பதினொரு பரப்புக் காணியும் சேர்க்கப்பட்டு தற்போது மைதானம் இருபத்தெட்டுப் பரப்பினைக் கொண்ட திடலாக மாறியுள்ளது.

தனியாருக்குச் சொந்தமான இக்காணி சுவீகரிப்பு முயற்சியில் கல்லூரி அதிபர் திரு. கே. கே. நடராசா, வட்டுக்கோட்டைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு ஆகியோர் தீவிரமாக உழைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி சுவீகரிக்கப்பட்ட காணி கையளிப்பு வைபவம் அண்மையில் கல்லூரியில் நடைபெற்றது. இவ் வைபவத்தின் போது அரசாங்கத்தின் சார்பில் சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு எம். சிவசுப்பிரமணியம் கலந்துகொண்டு காணி உறுதிப்பத்திரத்தை வட்டுக்கோட்டை வட்டாரக் கல்வி அதிகாரி திரு ப சண்முகராசாவிடம் கையளிக்க அவர் அதனை கல்லூரி அதிபரிடம் கையளித்தார். [கு]

## இந்தியாவிலும் 'வாட்டர்கேட்'

புதுடில்லி, ஆக 9

இந்தியாவில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஜெகஜீவன்ராமின் தொலைபேசிச் சம்பாஷணைகள் ஒற்றுக்கேட்கப் படுகின்றனவாம்.

இது குறித்து அவர் அரசாங்கத்திடம் புகார் செய்துள்ளார்.

தம்மைப் பொலிசார் உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாகவும் அவர் தமது புகாரில் தெரிவித்துள்ளார். [எ]

## ஈட்டு வழக்கில் விற்பனவுக்கான அதிகாரம்

### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

டாக்டர் ராஜரட்ணம் நடராசா,
27, இன்ரேஸ் அவென்யூ, கொழும்பு.

வழக்காளி

இல. ஈடு/14807

எதிராக

1. வள்ளியம்மா (இறந்த ஆறுமுகம் சண்முகம் சங்கரப்பிள்ளையின் சொத்துக்களின் நிறைவேற்றுநர்)
2. ஆறுமுகம் சண்முகம் ஆறுமுகம், பாலாவோடை, காரைநகர்.

எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தின் 14807-ம் இலக்க ஈட்டு வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் மூன்று துண்டுக் காணிகளை 1979-ம் ஆண்டு ஆவணி மாதம் 29-ந் திகதி புதன் கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் பின்வரும் மூன்று துண்டுக் காணிகள் முதலாம் காணியிலிருந்து முறைப்படியே அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

மேற்குறித்த எதிராளிகள் குறித்த வழக்காளிக்கு ரூபா 25,335/-வும் மேலும் ரூபா 20000/-க்கு 31-3-75 தொடக்கம் 3-10-77 வரைக்கும் 100/-க்கு 10 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரைக்கும் 5% வீத வட்டியும் வழக்குச்செலவு ரூபா 945-49 (இதில் நடைபெற்ற செலவு ரூபா 643-50 நடைபெறவேண்டிய செலவு ரூபா 187-40. மேலதிக சமயாசமயச் செலவு ரூபா 114-59 கொடுக்கவேண்டியிருப்பதாலும்)

### குறித்த ஆதனங்கப்பு

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கரைச்சிப் பகுதி பச்சிலைப்பள்ளி கோவிற்பற்று முரசுமோட்டை இறை "முரசுமோட்டைக்காடு" விசாலம் 14ஏக்கர் 1 றூட் 35 பேர்ச்சஸ் பதில் அளவையாளர் நாயகம் (Acting Surveyer General, R. J ஜோன்ஸ்டன் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 18-7-1938 திகதியிட்ட T 18894-ம் இலக்கமிட்ட பிளானில் சுட்டப்பட்ட காணி இதற்கு எல்லை கிழக்கு வாஞ்டி ஆறு வடக்கு T. P. T. 16576 மேற்கு வாய்க்காலுக்காக ஒதுக்கிவிடப்பட்ட நிலம் தெற்கு 117-ம் இலக்க துண்டு.

2. மேற்படி இறை "முரசுமோட்டைக்காடு விசாலம் 26 ஏக்கர் 1 றூட் 22 பேர்ச்சுகள் இது அளவையாளர் நாயகத்தால் தயாரித்து அவர் பொறுப்பில் உள்ளதால் இலக்கங்கள் 14/4, 14/45 குறித்த I. S. P. பிளான் 5ல் 196-ம் 199-ம் இலக்கத்துண்டுகளாகச் சுட்டப்பட்டுள்ளன. இதில்மேற்குப்புறமாக16ஏக்கர் 1றூட் 22 பேர்ச்சும் புதிதாக கட்டிய வீடும் கிணறும் இதைச் சேர்ந்தவைகளும் இந்த 16 ஏக்கர் 1 றூட் 22 பேர்ச்சுக்கு எல்லை கிழக்கு சுவாமிபிள்ளை செபஸ்தியாம்பிள்ளையின் உரித்தாளருக்கும் இராமனுதர் சரவணமுத்துவுக்குரிய ஆதனங்களும் வாஞ்டி ஆறு ஓரமாக ஒதுக்கப்பட்ட நிலமும் வடக்கு T. P. T. 18894-ம் வாஞ்டி ஓரமாக ஒதுக்கப்பட்ட நிலமும் மேற்கு வாய்க்கால் ஓரமாக ஒதுக்கப்பட்ட நிலமும் வாய்க்காலுக்காக ஒதுக்கப்பட்ட நிலமும் தெற்கு வாய்க்கால்.

3. மேற்படி இறை முரசுமோட்டைக்காடு விசாலம் 10 ஏக்கர் எல்லை கிழக்கும் வடக்கும் வாஞ்டி ஆறு ஓரமாக ஒதுக்கப்பட்ட நிலமும் மேற்கு வாஞ்டி ஓரமாக ஒதுக்கப்பட்ட நிலமும் ஈடு வைத்தவருக்குரிய ஆதனமும் எதிராளிகளின் ஆதனமும் தெற்கு வாய்க்கால் ஓரமாக ஒதுக்கப்பட்ட நிலம்

க. சுப்பிரமணியம்,
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.

89 முதலாம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்,
12-7-79 3265

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

### மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

குரும்பசிட்டி என்னுமிடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற வேலுப்பிள்ளை கந்தையா நவரத்தினம் என்பவரின் மரணசாதனத்தினதும் எழுத்தாவணத்தினதும் விடயத்தில்

மரணமெய்தியவர்

நவரத்தினம் அசோக்குமார், குரும்பசிட்டி, தெல்லிப்பழை.

மனுதாரர்

மரணசாதன நியாயாதிக்கம் இல: T/40

எதிராக

1. நவரத்தினம் கைம்பெண் பராசக்தி
2. நவரத்தினம் கிறிஸ்காந்த குமார்
3. நவரத்தினம் மகள் இவாஜினி
4. நவரத்தினம் மகள் வசந்தினி (பராயமற்றவர்) எல்லோரும் குரும்பசிட்டி, தெல்லிப்பழை. 4-ம் எதிர்வாதி பராயமற்றவர் தனது பாதுகாவலராக நியமிக்கப்படவிருக்கும் 1-ம் எதிர்வாதி மூலம்

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 7-ம் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக்கட்டளைப்படி

மு. நல்லலிங்கம்,
பதிவாளர்.

1979-ம் ஆண்டு ஆனி மாதம் 19-ம் நாளன்று திகதியிடப்பட்டது.

தயாரித்தவர்:
ச. பரமநாதன்,
மனுதாரரின்சட்டத்தரணி
3200


யாழ்ப்பாணம்
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரைவுள்ளது)

யாழ். நகர் மக்களுக்கு ஓர் நற்செய்தி

யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்க வைத்தியசாலை
வழங்கும்

குறைந்த செலவில் நிறைந்த சேவை

டாக்டர் என். அருளய்யா எம். பி.பி.எஸ். அவர்களால்

சகல விதமான நோய்களுக்கும்
குறிப்பாக ஆஸ்மா சம்பந்தமான வியாதிகளுக்கு
ஆங்கில வைத்தியம் அளிக்கப்படும்
அத்துடன்

- குறைந்த செலவில் கடும் நோயாளர்கள் தங்குமிட வசதி
- வைத்திய நிபுணர்களை அழைத்துப் பார்வையிட வசதி

இன்றே விஜயம் செய்யுங்கள்

கூட்டுறவு வைத்தியசாலை,
(உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்திற்கு அருகாமையில்)
கண்டி றேட், யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல. 626. (3269)

நல்லை உற்சவம் இன்று 12-ம் நாள்

# ஆலயத் தொண்டுகளால் கிடைக்கும்பெரும்பயன்கள்

நல்லைப்பதியில் ஆடித் திங்கள் ஞாயிற்றுக்கிழமை 13ம் நாள் (29-7-79) கொடியேறி உற்சவங்கள் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகின்றன. வேற்பெருமான் சந்நிதி வாசலையடைந்ததும் நாம் இந்திரலோகச் சபாமண்டபத்தில் இருக்கின்றோமா என்ற உணர்வு தான் ஏற்படுகின்றது. சென்ற வருடம் காட்சியளித்த முத்துமணி மண்டபம் இப்பொழுது இராஜகோபுர வாசல்வரைக்கு விஸ்தரிக்கப்பட்டு அழகுசித்திரத் தூண்கள் தாங்கும் ஒரு தங்கமணி மண்டபமாகத் திகழ்கின்றது. மண்டபம் முற்றிலும் வரிசை வரிசையாக பலவர்ண முகிலாப்புகளும், அலங்காரசர விளக்குகளும் ஜொலிப்பதைக் காணலாம். சென்ற சில வருடங்களாக நல்லைக்கந்தன் ஆலயம் எவ்வளவோ விஸ்தரிக்கப்பட்டு அலமான வசந்தமண்டபம் அமைக்கப்பெற்றிருந்த போதிலும் பெருந்திருவிழாக்களில் பக்தர் வெள்ளம் பூஜை நேரங்களில் ஒரு தரமாவது தீபாராதனையைத் தரிசிக்க திக்குமுக்காடுவதைக் காணலாம். நல்லூரானின் பெருமையை என்னென்று சொல்வது? யாழ் குடாநாட்டில் எங்கும் சைவமணம் கமழுகின்றது. விரதமிருந்து நல்லூரானை வணங்கி சேவை செய்வோர் எண்ணிக்கை கூடியே வருகின்றது.

இதை எழுதும்போது "தினமணிக்கதிர்" தீபாவளி மலர் ஒன்றில் நான் படித்த பாட்டு ஒன்று நினைவுக்குவருகின்றது.

## தொகுப்பு: செ. இரத்தினசபாபதி

'கோயிலுக்கு செல்வதிலே
நன்மை ஒருகோடியுண்டு;
சென்றுவர சென்றுவர
சிந்தை தெளிவடையும்,
தொங்கும் திரைவிலகும்,
துரிய நிலை மலரும்,
ஆமாம், மாயத்
திரைவிலகும், தெய்வச்சிலை
தெரியும், இரண்டு
கரங்குவியும், உள்ளம்
கசிந்துருகும், நெஞ்சக்
கறை அகலும், கண்ணீர்
அரும்புரளும், நின்ற
வினை சரியும், வெட்டவெளி
தெரியும், ஆமாமாம்
வெட்ட வெளிதெரியும்,
நின்ற வினை சரியும்.

(திருமதி சௌவுந்திரா கைலாசம்)

### திருக்கோயில் சேவை செய்கின்றவர்கள் அடையும் பலன்

இறைவன் திருவிழாக்களில் அவனுக்கு சேவை செய்வோர் அடையும் பலனைப் பற்றி 'திருச்செந்தில் ஆண்டவன் கோயில் மகோற்சவ விளக்கம்' என்னும் வெளியீட்டிலிருந்து ஒரு பகுதியை முருகனடியார்கள் அறிந்து உய்யும் பொருட்டு கீழே தருகின்றேன்:

"இறைவன் திருவிழாக்களில், வலம் வருவோர் ஒவ்வோரடிக்கு ஒவ்வோர் அசுவமேதயாகபலன் எய்துவர். குருவுக்குப் பின்னே செல்கின்றோருக்கும் பலன் அஃதேயாகும். துவஜாரோஹணம் செய்யுங் காலத்தில் தரிசித்து வழிபட்டோர் வெள்ளி, பொன், மகவு, பௌத்திரர் முதலிய ஐசுவரியங்களை அனுபவித்திருப்பர். திருவிழாவில் நாடோறும் தரிசித்து வழிபட்டோர் உருத்திரர் ஆவார்கள் என்று சிவபுண்ணியத் தெளிவில் செப்பப்பட்டிருக்கிறது."

"காலையில் பிரதக்ஷணம் செய்தால் வியாதி நாசமும், மத்தியானத்தில் பிரதக்ஷணம் செய்தால் விரும்பிய சித்தியும், சாயங்காலத்தில் பிரதக்ஷணம் செய்தால் சர்வ பாபநீக்கமும், அர்த்தயாமத்தில் பிரதக்ஷணம் செய்தால் மோக்ஷசித்தியும் உண்டாம் என்று சகளாகம சாரசங்கிரஹத்தில் சொல்லப்பட்டிருக்கிறது."

"அங்கப் பிரதக்ஷிணஞ் செய்தவர் தீவினைகள் எல்லாம் நீங்கப்பெற்று முத்தியடைவர்."

"சந்நிதியிலுள்ள குப்பைகளை மெல்லிய துடைப்பத்தினால் திருவலகிடுபவர்கள் காமம், வெகுளி, மயக்கம், பொய் ஆகிய குப்பைகள் நீங்கிப் பரிசுத்தராய் விளங்குவார்கள். திருமெழுக்கிடுபவர்கள், மனக்கோயிலில் சிவலிங்கம் தோற்றப்பெறுவார்கள். திருவிளக்கு ஏற்றுபவர்களும், தீபங்களைத் தாங்குபவர்களும் கண்ணாடி தாங்குபவர்களும் சிவஞானத்தை அடைவார்கள். தூபம் தாங்குபவர்கள் ஆணவமலசக்தி நீங்கப்பெறுவார்கள். சாமரையாற் பணி செய்பவர்கள் மலநிவாரணத்தையும் திருவருட் செல்வத்தையும் அடைவார்கள். குடை பிடிப்பவர்கள் ஆஞ்ஞாசக்கரத்தையும் பலத்தையும் அடைவார்கள். வாகனம் தாங்குபவர்கள் கணநாதராய்த் திருக்கைலாசமலையை அடைந்து இன்புற்றிருப்பார்கள். கற்பூரதீபந் தாங்குபவர்கள் அத்துவித முத்தியடைவார்கள். அடியார்களுக்கு அன்னமிடுதல், ஆலயத் திருப்பணி முதலியவற்றிற்கும் பொருள் செலவு செய்வது உத்தமோத்தமமாகும். அது பிறவுயிரும் தன்னுயிரும் மோக்ஷமடையக்கூடிய நல்வழியாகும். இது, அமர்நீதி நாயனார் மகோற்சவ தெரிசனத்துக்கு வந்த அடியார்களை திருவமுது செய்வித்துச் சிவலோகமடைந்த சரித்திரத்தாலும், கோச்செங்கட் சோழநாயனார் திருக்கோயில் பலவற்றைக் கட்டுவித்து சபாநாயகரது திருவடி நிழலை அடைந்த சரித்திரத்தாலும் நன்கு உணரப்படும். மெய்ப்பொருள் நாயனார் முதலிய சிவனடியார்களும், தமிழ் வேந்தரிற் பலரும், பிறரும் வேதாகம விதி தவறாது சிவாலயங்களிலே நித்திய நைமித்தியங்களைச் செய்வித்த புண்ணியப் பேற்றாலன்றோ தாம் தாம் விரும்பிய போகங்களை அனுபவித்து சிவபெருமானுடைய திருவடி நிழலை அடைந்தார்கள்.'

## மக்கள் கருத்து

### யாழ். மாநகர சபையும் தெருக்களும்

யாழ். மாநகர சபையின் நிருவாகத்திற்குட்பட்ட தெருக்களில் சில மிகமோசமான நிலையில் உள்ளன. மக்கள் நடந்து போகக்கூடிய நிலையில் இல்லை. குறிப்பாக மருதடி வீதி, விதானையார் வீதி, புறாடி ஒழுங்கை என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

குண்டும் குழியுமாகக் காட்சியளித்த குறித்த வீதிகளை கல்லையும் மண்ணையும் குவித்து மேலும் சீரழியவிட்டுவிட்டார்கள் மாநகர சபையினர்.

பிரசித்திபெற்ற நல்லூர்க் கந்தசாமி கோவில் உற்சவம் நடைபெற்று வருவதால், மருதடி வீதி மக்களின் போக்குவரத்துக்கு முக்கிய இடம்பெற்றுள்ளது.

உண்மையில், தற்போதுள்ள நிருவாகத்தினர் மக்களின் சேவைக்காகத்தான் தாங்கள் தெரிவுசெய்யப்பட்டு வந்தோம் என்று கருதினால் இப்படியான சீரழிந்த தெருக்களைக் கூடிய தொழிலாளர்களைக் கொண்டேனும் உடன்செய்து முடித்திருக்கலாம்.

கொழும்பு மாநகரத்தில் இப்படியான குறுக்குத்தெருவாக இருந்தாலும் சீரழியவிடமாட்டார்கள். எப்படியிருந்தாலும், இரவுபகலாகவேனும் இரண்டு நாட்களுக்குள் செய்து முடிப்பர்.

மேலும், தாமதிக்காமல் குறிப்பிட்ட வீதிகளையாகுதல் உடனடியாக செய்துமுடிப்பார்களா?

ஒரு பாதசாரி.

### கட்டிடத்தால் ஆபத்து

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் இருமாடிக் கட்டிடவேலை ஆரம்பமாகியுள்ளது. இது கல்லுக்கிண்டிய இடங்கு, மண்கொட்டித் தூர்வையான ஐந்து அடி ஆழநிலம், வெள்ளம் தங்கிநிற்கும் பள்ளப்பகுதி. அத்திபார அகலம் ஒன்றரை அடி. ஆழம் ஒன்றரை அடி. தூண்களின் அத்திவாரம் 2X2X3 அடி. இது மிகவும் ஆபத்தானது. கட்டிடம் சரிந்துவிழும் எனப் பெற்றோர்கள் அஞ்சுகிறார்கள். மாநில வித்தியாதிபதி இதனைக்கவனிப்பாரா?

ச. கந்தசாமி
(சங். சிவ. ம. வி. மு. ச. சபை உறுப்பினர்)

'முருகா'

'தரணிதனில் அறுபத்து அறுகோடி தீர்த்த முன் சரவணத் துள்ளடக்கம்
சாற்றுமோர் எழுகோடி மந்திரங்களும் உன் சடாக்ஷரத் துள்ளடக்கம்
விரத மிகு நவகோடி சித்தர்களும் நின் சுப வீட்சணந் தனில் அடக்கம்
மேலான தேவஆலயங்களும் உன் ஆறுபடை வீட்டினுள் ளேஅடக்கம்
இரவிமுதல் முப்பத்து முக்கோடி தேவர்களுன் இதயகம லத்தடக்கம்
ஈரேழு புவனமுதல் அண்டங்கள் பலவும் உன் இடத்தினில் அடக்கம், ஐயா
வரிசை மிகு பக்தஜன பரிபால ஞமோக வள்ளி குஞ்சரி மணாளா
வனசமல ரயன்மதனை மருகசரச கோபாலின் மருக சரவண முருகனே

— கவிகுஞ்சர பாரதி

ஒரு தரஞ் சரவண பவாஎன்று சொல்பவர் உளத்தினில் நினைத்ததெல்லாம்
உடனே கைகூடுமென வேதங்கள் மொழியுதே உண்மையிதி லான பொருளே
பரிவாக வேஅனந் தந்தரம் சரவண பவா என்று நான் சொல்லியும்
பரமிகு மிகு காங்கெயா அடியனேன் எண்ணியது பலியாது குப்பதேனோ
குருபரா முருகையா கந்தா கடம்பா சொல் குமரா குகா ஷண்முகா
கோசாக வா வெற்றி வேலா எனக்கருள் கொடுத்தாலவை முந்தையனே
மரு மலர்க் குழலழகு தேவகுஞ் சரி வள்ளி மணவனே என் துணைவனே
வன்ன மயில் வாகனா பொன் ஏரகம்பதியில் வளர்சாமி நாத குருவே

— சுவாமிமலை

சங்கானையில் மதுவரி

## உத்தியோகத்தர்கள் பனம் பாளைகளை வெட்டினார்களாம்

### சீவல் தொழிலாளி புகார்

(யாழ்ப்பாணம்)

சங்கானை மதுவரி உத்தியோகத்தர்கள் தனக்குத் தொந்தரவு தருவதாக இளவாலையைச் சேர்ந்த சீவல் தொழிலாளி ஒருவர் வடபகுதி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கத் தலைவருக்குப் புகார் செய்துள்ளார்.

திரு. செ. தேவராசா என்ற இத்தொழிலாளி தமது புகார் கடிதத்தின் பிரதியை நிதி, திட்டமிடல் அமைச்சர் திரு. ரொனி டி மெல்லுக்கும் அனுப்பியுள்ளார். திரு. தேவராசாவின் புகாரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

28-6-79 அன்று வழமைபோல் தனது வளவுப் பனையில் கள்ளுச்சீவி வைத்துவிட்டு, வேறு இடத்திற்குச் சென்று கள்ளுச் சீவிக்கொண்டு வரும்போது கார் ஒன்றில் சாதாரண உடையில் வந்த சங்கானை மதுவரி உத்தியோகத்தர்கள் தம்மை மறித்து தம்மிடமிருந்து மூன்று போத்தல் கள்ளை முட்டியுடன் பறித்து எடுத்தனர் என்றும் வீட்டிற்குச் சென்று வீட்டில் சீவி வைத்த ஆறுபோத்தல் கள்ளையும் முட்டியுடன் எடுத்துச் சென்றனர் என்றும் மதுவரி உத்தியோகத்தர்கள் தம்மை சங்கத்திற்கு வரும்படி கூறவே அங்குசென்றபோது சங்கத்தில் உள்ள புத்தகங்களைப் பார்வையிட்டபின் சங்கானை மதுவரிக் காரியாலயத்திற்கு வந்து கள்ளை எடுத்துச்செல்லும்படி கூறிவிட்டுச் சென்றனர் என்றும் சங்கத்திற்குக் கள்ளுக் கொடுக்கவேண்டியிருப்பதால் சங்கானை மதுவரிக் காரியாலயத்திற்குச் சென்றதாகவும் கள்ளுத் தேவையானால் நூறு ரூபா தந்துவிட்டுக் கள்ளை எடுத்துச்செல்லும்படி மதுவரி உத்தியோகத்தர்கள் கூறினார்கள் என்றும் கூறியுள்ள அவர் பணம் இல்லாததால் தாம் வீட்டிற்குத் திரும்பிவந்து ஒருவரிடம் நூறு ரூபாவைக் கடனாக வாங்கிக்கொண்டு சென்றதாகவும் பிற்பகல் நாலுமணியளவில் காரியாலயத்திற்குச் சென்றபோது நேரம்சென்றுவிட்டது புத்தகத்தில் பதிந்துவிட்டோம் என்று கூறியவர்கள் தம்மிடம் இருந்து நூறு ரூபாவைப் பெற்றுக்கொண்டு கையெழுத்தையும் வாங்கினர் என்றும் கள்ளை எடுத்துச் செல்வதற்காகச் சென்ற கள்ளைப் பார்வையிட்டபோது கள்ளில் தண்ணீர் கலக்கப்பட்டிருந்ததால் எடுக்க மறுத்துவிட்டதாகவும் கள்ளை எடுக்க மறுத்துவிட்டதால் மல்லாகம் கோர்ட்டில்வந்து எடுக்கும்படி கட்டாயப்படுத்தினார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

31-7-79ம் திகதி காலை பதினொரு மணியளவில் மூன்று காரில் பத்துக்குமேற்பட்ட மதுவரி உத்தியோகத்தர்கள் பொலிசாருடன் தமது வீட்டை முற்றுகையிட்டு சீவல் பனையிலுள்ள பாளைகளை வெட்டினார்கள் என்றும் பின் வீட்டில் இருந்த குண்டான் ஒன்றையும் வெற்றுப்போத்தல்கள் இரண்டையும், கோல், இரட்டை ஆகியவற்றையும் எடுத்துச்சென்றனர் என்றும் தாம் வீட்டில் இல்லாததால் தமது தயாரை வலோற்காரமாக இழுத்து அவரின் கைவிரல் அடையாளம் எடுத்துச்சென்றனர் என்றும் மதுவரி உத்தியோகத்தர்களுக்குதான் லஞ்சம் கொடுப்பதில்லை. இதனால் தம் மீது மனஸ்தாபம் கொண்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நிதிதிட்டமிடல் அமைச்சருக்கும் தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கத் தலைவர் ஆகியோருக்கும் இவ்விடயம் பற்றி விசாரணை செய்து தனக்குப் பாதுகாப்பு வழங்குமாறு மேற்படி மகஜர் மூலம் இவர் கோரியுள்ளார். (கொ)

மின்சாரத்திற்காக

## பண்டத்தரிப்பு பட்டணசபைக்கு ரூ. 40 ஆயிரம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பட்டணசபைப் பகுதியில் மின்சார அபிவிருத்தித் திட்டத்திற்கு 40 ஆயிரம் ரூபாவை இவ்வருடப் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. திருநாவுக்கரசு ஒதுக்கியுள்ளார்.

இதுவரை மின்சார விநியோகம் செய்யப்படாதிருக்கும் பகுதிகளுக்கு மின்சாரம் விநியோகிப்பதற்கும், முக்கிய சந்திகளில் 'மெர்க்குரி' விளக்குகளைப் பொருத்துவதற்கும் மரத்தினாலான மின்கம்பங்களுக்குப் பதிலாக கொங்கிறீட் தூண்களை நிறுவுவதற்கும் இந்நிதி பயன்படுத்தப்படவிருப்பதாகப் பட்டணசபை விசேட ஆணையாளர் திரு. எம். மயில்வாகனம் தெரிவித்தார். (அ)

## அமைச்சர் 'இராசு' மன்னார் விஜயம்

(மன்னார்)

பிராந்திய அபிவிருத்தி, இந்துக்கலாச்சார, தமிழ்மொழி அமுலாக்கல் அமைச்சர் திரு. செ. இராசதுரை மன்னாருக்கு இரண்டுநாள் விஜயத்தை மேற்கொண்டு இம்மாதம் 17ம் திகதி வருகைதரவுள்ளார்.

மன்னார் மாவட்ட அமைச்சரும், மூதூர் எம். பியுமான ஜனாப் எம். ஏ. எச். மஹ்ரூப் தலைமையில் நடைபெறவுள்ள மன்னார் மாவட்ட அபிவிருத்தி சம்பந்தமான மாநாட்டில் அமைச்சர் திரு. இராசதுரை கலந்துகொள்வார். (கு)

## பிரிட்டனின் மேற்பார்வையில்

# ரொடீஷியாவில் தேர்தல் நடத்த தேசியவாத முன்னணி எதிர்ப்பு

### என்கோமா, முகாபே ஆகியோர் புதிய திட்டத்திற்கு கண்டனம்

சாலிஸ்பரி, ஆக. 9

சிம்பாவே ரொடீஷியாவில் தமது மேற்பார்வையில் புதியதேர்தல் நடைபெற வேண்டும் என்ற பிரிட்டனின் திட்டத்தை ரொடீஷிய தேசாபிமான முன்னணித் தலைவர்களான என்கோமாவும் முகாபேயும் நிராகரித்துள்ளனர்,

பிரிட்டனின் மேற்பார்வையில் ரொடிஷியாவில் தேர்தல் நடைபெறுவதுடன் புதிய அரசியல் சாஸனமும் அமைக்கப்படவேண்டும் என்று லுஸாக்கா பொதுநல அமைப்பு நாடுகள் மகாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகுறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே தேசாபிமானத் தலைவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

தேசாபிமானத் தலைவர் திரு என்கோமா மேலும் கூறியதாவது:

ரொடீஷியாவில் சுதந்திரமாகவும், நேர்மையாகவும் தேர்தல் நடைபெற வேண்டும் என்பதற்கு எப்போதும் எமது ஆதரவு உண்டு.

ஆனால் வெள்ளையர்களே ரொடீஷிய நிர்வாகத்திற்குக் கொண்டுவந்த அதிகார அமைப்புமுறை நீக்கப்பட வேண்டும். அந்த அதிகார முறை நீக்கப்படும் வரை எமது தேசிய கொரில்லா இராணுவத்தினர் யுத்தத்தை ஒரு போதும் நிறுத்தமாட்டார்கள்

பொதுநல அமைப்பு நாடுகளின் மேற்பார்வையில் ரொடீஷியத் தேர்தலை நடத்துவதற்கு ஆலோசனை நடத்த நாம் தயாராக இருக்கின்றோம். ஆனால் எக்காரணம் கொண்டும் பிரிட்டனின் மேற்பார்வையில் தேர்தலை நடத்த நாம் அனுமதிக்க மாட்டோம்.

செய்ரோவில் பி. பி. ஸி நிருபருக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு கூறிய என்கோமா, ரொடீஷியப் பிரதமர் பதவியை அடையும் நோக்கம் உண்டா? பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்ளும் திட்டத்தில் முன்னுள் பிரதமர் திரு. இயன்ஸ்மித் மீது விசாரணை நடத்தப்படுமா? என்ற கேட்கப்பட்ட கேள்விகளுக்கும் பதில் அளிக்கையில் கூறியதாவது:

முதலில் இட்சியம் கைகூட வேண்டும். அதற்குப்பின்னரே பிரதமர் பதவி பற்றியோ எதிர்காலம் ஏனைய நடவடிக்கைகள் பற்றியோ சிந்திக்கப்படும். (இ)

## இஸ்ரேலுக்கு அமெரிக்கா எச்சரிக்கை

வாஷிங்டன், ஆக. 9

லெபனனில் அமெரிக்கா உதவிய ஆயுதங்களை இஸ்ரேல் பயன்படுத்துவது குறித்து அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. சைரஸ் வான்ஸ் இஸ்ரேலை எச்சரித்துள்ளார். — (இ)

## வண்ணை. கதிரேசன் கோவிலில் இன்று

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீசெந்தில் கதிர் வேலாயுத சுவாமிகோவில் மண்டலாபிஷேக விழாவின் 27வது நாளான இன்று காலை மகாபிஷேகம், ஸ்நபனாபிஷேகம், விசேஷ பூஜைகளும் மாலை சயரட்ன பூஜையும் நடைபெறும்.

இரவு பிரம்மஸ்ரீ சி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் 'அபிஷேக விளக்கம்' என்னும் பொருள் பற்றி உரையாற்றுவார். (கு)

# இந்திய - ரஷ்ய நட்புறவு புதிய ஆட்சியில் வலுவடையும்

### பிரதமர் சரண்சிங் கொஸிஜினுக்கு கடிதம்

புதுடில்லி, ஆக. 9

சோவியத் யூனியனுக்கும் இந்தியாவுக்கு மிடையேயான நட்புறவை வலுப்படுத்த தமது அரசு தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்ளும் என்று இந்தியப் பிரதமர் திரு. சரண்சிங் தெரிவித்துள்ளார்.

திரு. சரண்சிங் புதிய பிரதமராகப் பதவி ஏற்றதை அடுத்து பாராட்டுச் செய்தி ஒன்றை ரஷ்யப் பிரதமர் திரு. கொஸிஜின் அனுப்பியிருந்தார்.

இப்பாராட்டுச் செய்திக்கு நன்றி தெரிவித்து பதில் அளிக்கையிலேயே திரு. சரண்சிங் மேற்கண்டவாறு கூறினார்.

ரஷ்ய-இந்திய ஒத்துழைப்புக்களை விரிவாக்கவும் புதிய அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் திரு. சரண்சிங் தமது பதில் கடிதத்தில் தெரிவித்துள்ளார். (இ)


வீடு கட்டுதல், சுவர் எழுப்புதல், தரை அமைத்தல்...

எதுவாயினும் பாவியுங்கள்

மேசன் வேலைக்கான சீமெந்து



மேசன் வேலைக்கான சீமெந்து, வீட்டு நிர்மாணத்தில் ஒரு புதுமையாகும், இது சிக்கனமானது, மலிவானது. சீமெந்துக்கான அமெரிக்க தர நிர்ணயத்துக்கு இணங்கியது. போர்ட்லண்ட் சீமெந்தைப் போலவே இதனையும் பாவிக்கலாம். சீமெந்து / மணல் விகிதாசாரம் போர்ட்லண்ட் சீமெந்துக்கும் போலவேயாகும். மேசன் வேலைக்கான சீமெந்துக்கு சுண்ணாம்பு தேவையில்லை. மணல், சீமெந்து, தண்ணீர் இவை மூன்றுமே போதும்; கலவை பூரணமாகிவிடும்.

மேசன் வேலைக்கான சீமெந்து கொண்டு கட்டடச் செலவைக் குறையுங்கள்:

- கொங்கிறீட் வேலைக்குப் பயன் படுத்தக்கூடாது: 50 கி. கிராம் கொண்ட ஒரு பை மேசன் வேலைக்கான சீமெந்தின் விலை:
- புத்தளம் அல்லது காங்கேசன்துறைத் தொழிற்சாலையிலிருந்து ரூபா 17/90
- காலி தொழிற்சாலையிலிருந்து ரூபா 20/80.

## இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்

தபால் பெட்டி 1382, சுதந்திர சதுக்கம், கொழும்பு-7. தொலைபேசி: 95628, 95801-4.

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) தினசரி; 10-30, 3-30, 6-30, & 9-45.
கே. பி. சுந்தராம்பாள் நடித்த
**ஒ ள வை ய ா ர்**

**[illegible]** (யாழ். நகர்) போன் 7698 தினசரி 4 காட்சிகள்
**கல்யாணபரிசு**
(புதிய பிரதி)

**ராஜா** (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - கே.ஆர். விஜயா நடித்த
**நெஞ்சிருக்கும் வரை**
(புதிய பிரதி)

**ராணி** (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள் சிவாஜி-ஜமுனா
**நிச்சய தாம்பூலம்**
(புதிய பிரதி)

**மனோகரா** (யாழ். நகர்) 10-30, 2-30, 6-30. 9-45
எம்.ஜி.ஆர்.-பத்மினி-நம்பியார்
**ராணி சம்யுக்தா**
(புத்தம்புதிய பிரதி)
கடைசித்தடவையாக யாழ். நகர் வந்திருக்கிறாள் சம்யுக்தா. தவறவிடாதீர்கள் சந்தர்ப்பத்தை.

**REGA** (Jaffna)
Daily 10-30, a m 2-00, 4-30, 7-00 p m. only
No Passes Please
The long awaited suspense thriller of all time...
It is the greatest mystery of all because no human being will ever solve it
It is the highest suspense because no man can bear it.
It is the greatest fear because it is the ancient fear of the unknown
It is a warning foretold for thousands of years.
It is our final warning.
IT IS
**THE OMEN**
Twentieth Century Fox presents
GREGORY PECK—LEE REMICK
வினாடிக்கு வினாடி உங்களை மெய்சிலிர்க்க வைக்கும் பயங்கரப் படம்.
**"ஆவிகளின் அட்டகாசம்"**
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)
(FOR ADULTS ONLY)

**வின்சர்** (யாழ்ப்பாணம்) போன்: 466 தினசரி 3 காட்சிகள்
10-30 2-00 6-00
சோபன்பாபு - ஜெயலலிதா நடித்த
**ரிவோல்வர் ரீட்டா**

Daily 5 Shows
**SHANTHI** JAFFNA Phone: 7642
— N-B: ALTERED SHOW TIMES —
Daily 10-30, 2-15, 4-45, 7-15, & 9-45
THE DREADED ODESSA
Peter Miller is gone inside More than a few people hope he does'nt get out............ever!......
JON VOIGHT... Winner Best Actor Award 1979
with MAXIMILIAN SCHELL & MARY TAMM.
**"THE ODESSA FILE"**
Action - Suspense - Thriller - Scope - Color

**Grand Opening Today at Sridhar - Jaffna**
at 10-30 a m. 3-00. & 7-30 p m.
AT LAST ITS BACK
The Greatest Motion Picture OF All Time In
CECIL B DEMILLE'S
**THE TEN COMMANDMENTS**
Color
Starring; Two Great Stars
CHARLTON HESTON — YUL BRYNNER
**SEE** The parting of the Red Sea
The most spectacular scene ever filmed

# யாழ். நகரில் மண்ணெண்ணெய்க்கு மக்கள் படையெடுப்பு

## ஒருவாரமாக நடைபெறும் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஒரு வாரமாக ஸ்ரான்லி வீதியிலுள்ள ஒரு எரிபொருள் விற்பனை நிலையத்திற்கு முன்னால் பொதுமக்கள் முற்றுகையிட்டு வருகின்றனர்.

இந்த முற்றுகைக்குக் காரணம் இந்த எரிபொருள் விற்பனை நிலையத்தில் இருந்து பொதுமக்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படுவதேயாகும்.

திரு ஏ. ஜி. ராஜசூரியருக்குச் சொந்தமான இவ்விற்பனை நிலையத்தில் விடிகாலையில் இருந்தே மக்கள் கூடத் தொடங்குகின்றார்கள். இவர்கள் அனைவருக்கும் மண்ணெண்ணெய் விநியோகம் சீராகக் கிடைக்கும் வகையில் ஒழுங்குகளை திரு ராஜசூரியர் மேற்கொண்டிருக்கின்றார். பெருந்தொகையான மக்கள் ஒரே சமயத்தில் கூடுவதால் ஏற்பட்டுள்ள நெருக்கடியை தவிர்க்கும்பொருட்டும், வண்டிலில் கொண்டு சென்று மண்ணெண்ணெயை விற்பனை செய்யும் வியாபாரிகளுக்கு பாதகமற்ற வகையிலும் சகல வண்டில்காரர்கள் மூலமும் நிலைய முன்பாக வைத்தே மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டுவருகிறது.

மண்ணெண்ணெயை அட்டைக்குக் கொடுக்கும் அரசின் புதிய திட்டத்தை அடுத்து வியாபாரிகள் மண்ணெண்ணெயைப் பதுக்காதிருக்கவும் பாவனையாளர் மண்ணெண்ணெய்த் தட்டுப்பாட்டால் பாதிக்கப்படாதவகையிலும் தாம் இவ்வித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக திரு. ராஜசூரியர் கூறினார். (கா-வி)

## இன்றைய பலன்

ஆடி மாதம் 25-ம் திகதி
(வெள்ளிக்கிழமை)
(10 8-1979)

**மேடம்:** கருத்து வேற்றுமைகள் காலத்துக்கு இடமளிக்கும். புதிய இடத்திலிருந்து பணம் தலைதூக்கலாம். மௌனமும் தெய்வபக்தியும் நன்று.

**இடபம்:** பயன்தரும் பிரயாணமொன்று மேற்கொள்ளப்படலாம். வெளியிடத் தொடர்புகள் பெருகும். கருத்து வேற்றுமைகள் மறைந்து நல்ல முடிவு ஏற்படும். கல்வித்துறையில் முன்னேற்றமுண்டு.

**மிதுனம்:** உள்ளம் உவகையால் துள்ளும். உறவு முறைகளில் இறுக்கம் ஏற்படும். பெரியார் ஒருவரின் சந்திப்பு உங்களுக்குப் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தும். அறவழியில் நாட்டமுண்டு.

**கடகம்:** விஷமிகளின் தொல்லைகள் அதிகரிக்கும். தவறான வதந்திகளைப் பரப்புவதற்கு அவர்கள் முயற்சி செய்யக்கூடும். எவரிடத்திலும் அதிக பேச்சை வளர்க்க வேண்டாம். மௌனம் சிறந்த மருந்து.

**சிங்கம்:** திடீர் வரவுகளுக்கு இடமுண்டு. வாழ்க்கையிலும் நல்ல திருப்பம் ஏற்படும். பேச்சுவன்மையின்மூலம் பெரிய இடத்து ஆதரவைத் தேடிக்கொள்வீர்கள். குடும்பத்திலும் சுவையான நிகழ்ச்சிகள் உண்டு.

**கன்னி:** ஆரம்ப சூரத்தனம் ஆபத்தில் முடியலாம். பூமிப் பிணக்கால் நஷ்டத்துக்கு இடமுண்டு. சிலர் உஷ்ணரோகங்களுக்கும் இலக்காகலாம். உணவுவிடயத்தில் அதிக கவனம் செலுத்தவும்.

**துலாம்:** மற்றவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாவீர்கள். பெரிய மனிதர்களின் உறவு தாராளமாகக் கிடைக்கும். குறிக்கோளில் வெற்றியுண்டு.

**விருச்சிகம்:** கூட்டு வியாபாரத்தில் முன்னேற்றமுண்டு. வெளியூரிலிருந்து திருப்திகரமான செய்தி கிடைக்கும். கடமையில் ஆர்வம் பிறக்கும். நிம்மதியான தினம்.

**தனுசு:** புதிய தொழில் மூலம் இலாபம் கிடைக்கும். புத்திரர்களுடைய செல்வாக்கு பெருகும். புதுமையான எண்ணங்கள் மனதில் வட்டமிடும். பூமியால் முன்னேற்றமுண்டு.

**மகரம்:** கடன் தொல்லைகள் கவலையைத் தரும். உறவினருடன் பிணக்குகள் தோன்றும். நண்பர் ஒருவரின் நடவடிக்கை கவலையைத் தரலாம். புதிய முதலீடுகளைத் தவிர்ப்பதுடன் உஷாராக இருக்கவும்.

**கும்பம்:** அரசியல் வாதிகளுக்கு இன்று அடி சறுக்கலாம். நான் என்ற அகம்பாவத்தை அடக்கிக் கொள்ளவும். விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை வெற்றிக்கு வழி அளிக்கும்.

**மீனம்:** இனிய வார்த்தைகளின் மூலம் எல்லோரையும் வசீகரிப்பீர்கள். பொருள் வரவுக்கும் இடமுண்டு. சுற்றாடலில் மதிப்பு உயரும். பெரியவர்களே உங்கள் ஆலோசனைகளைக் கேட்க முன்வருவார்கள். இறை அருளும் உண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
**மனிதனும் தெய்வமாகலாம்**

**வெல்லி**
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
சனி. ஞாயிறு 2-30
கமலஹாசன் - சுஜாதா
**உயர்ந்தவர்கள்**

**RIO** (Jaffna-TownHall) Phone: 7607
Daily 10-30, 4-45, 7-00, 9-30 P M.
Ryan O' Neal
Bruce Dern in
**DRIVER**

## நெடுந்தீவுச் சங்கத்திடம் படகுகள் கையளிப்பு

(நெடுந்தீவு)

புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான, நெடுந்தீவுக்குச் சேவையிலிருந்த இரண்டு படகுகளும் நெடுந்தீவு பொதுச் சேவைக் கூட்டுறவுச் சங்கத்திடம் கையளிக்கப் பட்டுள்ளன.

நெடுந்தீவு மக்களின் நீண்டநாள் கோரிக்கையின் பேரில் தற்போது கையளிக்கப்பட்டுள்ள இப்படகுகளின் மூலம் நெடுந்தீவும் படகுச்சேவையும் அம்புலன்ஸ் சேவையும் சிறந்த முறையில் அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இப்படகுகளைக் கையளிக்கும் விழா புங்குடுதீவு ப.நோ.கூ. சங்கத் தலைவர் திரு நா. தருமலிங்கம் தலைமையில் நடைபெற்றபோது நெடுந்தீவு பொதுச்சேவைக் கூட்டுறவுச் சங்கத்தின் பிரதித் தலைவர் திரு நா. இலட்சுமணராசா பேசுகையில் "புங்குடுதீவு மக்களும், நெடுந்தீவு மக்களும் தனித்தனியாக நிர்வாகத்தைப் பொறுப்பேற்றுக் கொண்டாலும் பரஸ்பரம் நல்லெண்ணமும், நம்பிக்கையும் கொண்டு ஒத்துழைப்புடன் பணியாற்றுவதன் மூலம் கூட்டுறவின் தத்துவங்களை மதித்து நடப்போம்" என்றார்.

திரு நா. தருமலிங்கம் தமது தலைமையுரையில் "கையளிக்கவிருக்கும் படகின் சேவை நெடுந்தீவு மக்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று. எமது சங்கத்தின் ஏற்றுமதி இறக்குமதி வேலைகளுக்கும் இப்படகை ஈடுபடுத்த நீங்கள் உறுதியளிக்க வேண்டும். நாம் எல்லோரும் ஒருமித்து சேவையாற்றுவதன் மூலம் இருபகுதியினரின் வளர்ச்சிக்கும் உதவுவோம்" என்றார்.

நெடுந்தீவு பொதுச் சேவைக் கூட்டுறவுச் சங்கச் செயலாளர் திரு ஞா. மரியநாயகம் உட்பட பலர் உரையாற்றினார்கள்.

இரு கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளும் கூட்டம் முடிவடைந்ததும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்திற்குச் சென்று வழிபட்டபின் கையேற்கப்பட்ட படகின் வெள்ளோட்டத்தை ஆரம்பித்து வைத்தனர். (கு)

## புராணபடனப் பூர்த்திவிழா

(புலோலி)

ஈழத்துக் கதிர்காமம் எனப் போற்றப்படும் புலோலி உபய கதிர்காமத்தில் மூன்றுமாத காலமாக நடைபெற்றுவந்த கந்தபுராணப்படிப்புப் பூர்த்தி விழா கடந்தவாரம் விசேஷ பூசைகளுடன் அன்னதானமும் நடைபெற்றது.

## ஜி. சி. ஈ. பரீட்சைகள் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

இன்று ஆரம்பமாகி இம்மாதம் 21ந் திகதிவரை நடைபெறவிருக்கும் க. பொ. த சாதாரண பரீட்சைக்கு இரண்டு லட்சம் பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். இப்பரீட்சார்த்திகளில் அனைவரும் பிரத்தியேக பரீட்சார்த்திகள் என்பது குறிப்பிடத்தக்கது. மேற்படி பரீட்சை நாடுபூராவுமுள்ள 1,851 பரீட்சை நிலையங்களில் நடைபெறவிருப்பதாகப் பரீட்சைத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஞாயிறு வாகனத் தடை

# மந்திரிகளின் கார்களுக்கும் விதிவிலக்கு கிடையாது

## அனுராவின் திருத்தத்திற்கு அமைச்சர் பதில்

(கொழும்பு)

"இம்மாதம் 12ம் திகதி அமுலுக்கு வரவுள்ள போக்குவரத்துத் தடைச்சட்டத்திலிருந்து அமைச்சர்களின் வாகனங்களுக்குக்கூட விதிவிலக்களிக்கப்படமாட்டாது"

இவ்வாறு போக்குவரத்து அமைச்சர் ஜனுப் எம். எச். முகமது நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

போக்குவரத்துத் தடைச் சட்டம் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது நுவரேலியாத் தொகுதி இரண்டாவது எம். பி. திரு. அனுரா பண்டாரநாயக்கா சமர்ப்பித்த திருத்தப்பிரேரணைக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போக்குவரத்துத் தடைச் சட்டத்திலிருந்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விதிவிலக்களிக்கவேண்டும் என திரு. பண்டாரநாயக்கா கொண்டுவந்த திருத்தத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

திரு அனுரா பண்டாரநாயக்கா தொடர்ந்து பேசுகையில் "பொறுப்பான எதிர்க்கட்சி என்ற வகையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எரிபொருள் பிரச்சினையை அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தமாட்டாது என்றும் எரிபொருளை சேமிக்க வேண்டும் என்ற அவசியத்தை தமது கட்சி ஏற்றுக் கொள்கிறது" என்றும் கூறினார். (கு-இ)

## தந்திக்கம்பி திருட்டு, பொலிசார் உஷார்!

[கொழும்பு]

தொலைபேசி, தந்திக்கம்பி களைத் திருடுவோருக்கெதிராக பொலிஸ் திணைக்களமும், தபால்தந்திச்சேவைத் திணைக்களமும் கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வந்துள்ளன

இதுபற்றி தொலைபேசிச் சேவை இயக்குனர் திரு ஏ. ஆர் எம் ஜயவர்த்தன தெரிவிக்கையில், இவ்வாறான செம்புக்கம்பித் திருட்டுக்களால் நாட்டின் தொலைபேசி, தந்திச் சேவைகள் மிகமோசமாகப் பாதிக்கப்படுவதாகவும், கடந்த இரு வருடங்களில் திணைக்களத்திற்கு பல லட்சக்கணக்கான ரூபா நஷ்டமேற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

நாட்டின் கரையோரப்பிரதேசங்களும், நகரசபைக்குட்பட்ட சில பகுதிகளுமே இத்திருட்டுச் சம்பவங்களுக்கு இலக்காகின்றன என்றும் அவர் கூறினார்.

பிரதி பொலிஸ்மா அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம், மாதந்தோறும், தொலைபேசித் திணைக்கள அதிகாரிகளுடன் இத்திருட்டு நடவடிக்கைகளை முறியடிப்பது சம்பந்தமாக ஆலோசனைகளை நடத்தி வருகிறார். மேலும் இச்செயல்களை முறியடிப்பதற்குநாட்டின்சகல பொலிஸ் நிலையங்களும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## யாழ். மாவட்டத்தில் புல் உற்பத்திக்குப் பண உதவி

### திட்டத்தைச் செயற்படுத்த அமைச்சர் தொண்டமான் உத்தரவு

[உடுப்பிட்டி]

மிருக வளர்ப்பையும், பால் உற்பத்தியையும் பெருக்கும் நோக்கத்துடன் யாழ் மாவட்டத்தில் புற்தரைகளை அபிவிருத்தி செய்வதற்கென அரசாங்கம் உதவிப்பணம் வழங்கவுள்ளது.

கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு இப்புற்தரை அபிவிருத்திக்கென உதவிப்பணம் வழங்கும் திட்டத்தைச் செயற்படுத்துமாறு யாழ். மாவட்டக் கமநல சேவை உதவி ஆணையாளரைப் பணித்துள்ளது

புற்தரை வளர்ப்பு மேற்கொள்ளப்படும் ஒரு ஏக்கர் நிலத்திற்கு 300 ரூபா உதவிப் பணமாக வழங்கப்படும் என்றும், அரை ஏக்கருக்குக் குறையாத நிலத்தில் புற் செய்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்றும், இந்த உதவிப் பணம் கோருவோர் தாம் புல்வளர்க்கும் காணியின் உரிமையை அத்தாட்சிப்படுத்துவதற்கு உறுதிகளைச் சமர்ப்பிக்கவேண்டும் என்றும், குத்தகைக் காணிகளாயின் பத்து வருடக் குத்தகை உரிமை அனுமதிக்கப்பட்டவராக இருக்கவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது

தென்னங் காணிகளில் புல் வளர்ப்பதற்கும் இவ்வுதவிப் பணம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உதவிப் பணம் வழங்கும் திட்டம் கமநலச் சேவைத் திணைக்களத்தின்கீழ் உள்ள கமநல சேவை நிலையங்களினூடாக மேற்கொள்ளப்படவுள்ளன. [உடுப். அ]


உடன் தேவை

சிங்கப்பூருக்கு

மரைன் என்ஜின் பிற்றர்கள்

(MARINE ENGINE FITTERS)

தேவை

சகல அத்தாட்சிப் பத்திரங்களுடன் 12-8 79 க்கு முன் நேரில் வரவும்.

என். ரி- ரவல்ஸ்

59, விக்ரோறியா வீதி,

யாழ்ப்பாணம்

Labour Licence No: 197. 3270


## தமது அலுவல...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் எதிர்ப்பதாகத் தெரிய வருகிறது. இது அர்த்தமற்ற எதிர்ப்பாகும். இப்படியான பரிசோதனைக்குழு பாடசாலைகளுக்குத் திடீர் விஜயம் செய்து நிலைமைகளை ஆராய்வதனால் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு வளர்வதற்கும் வருங்காலச் சந்ததியினரான மாணவர் சமுதாயம் பெரும் முன்னேற்றம் அடைவதற்கு வழிபிறக்கின்றது.

மாணவர் கல்வி முன்னேற்ற வழியில் உறுதுணையாய் சைவத் தமிழ் வித்தியாலயம் எடுத்துக்காட்டாக விளங்குவதை கல்விப்பகுதியும் சைவ தமிழ் உலகும் நன்கறியும். சைவத்தமிழ் வித்தியாலயம் என்ற பெயருக்கேற்றவாறு இவ் வித்தியாலயம் சைவ வளர்ச்சியின் பொருட்டும் தமிழ் வளர்ச்சியின் பொருட்டும் இடைவிடாது உழைத்து வருகின்றது:

வித்தியாலய அதிபர் திரு. வி. ஆரியநாயகம் தமது தலைமை உரையில் "கல்வி உலகில் முன்னேற்றமான பல மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. அந்த மாற்றங்களுக்கேற்ப வித்தியாலயங்கள் இயங்கினால்தான் வருங்காலச் சந்ததி வளம்பெறும்" என்றார். பிரதி அதிபர் திரு: அ பஞ்சாட்சரம் பேசுகையில்: சைவம் தமிழ் இரண்டையும் நன்கு போற்றும் கல்வி அதிபதியின் நல்லுரைகள் மாணவர்க்கு நல்வழி காட்டுவனவாக அமையும்" என்றார்.

திருமதி ஞானம் பிலைக சாணிக்கவாசகர் மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கினார்.

ஆசிரியர் திரு க.பாலசுப்பிரமணியம் நன்றிதெரிவித்துப் பேசியதை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. (கா-கு)

## உபஜனாதிபதி 31ம் திகதி பதவிஏற்பர்

புதுடில்லி, ஆக.9

இந்தியாவின் உபஜனாதிபதியாக முன்னை தலைமை நீதிபதி ஜனாப் எம். ஹிதயத்துல்லா தெரிவு செய்யப்பட்டுவிட்டதாக இன்று முறைப்படி அறிவிக்கப்பட்டது. இம்மாதம் 31ம் திகதி அவர் தமது பதவியை ஏற்றுக்கொள்வார்.

சட்டசபையை நடத்தும் அனுபவம் இல்லாதுபோனாலும் சபையின் சகல உறுப்பினர்களுக்கும் பாரபட்சமின்றி நடந்துகொள்வாரென ஜனாப் ஹிதயத்துல்லா அறிவித்துள்ளார். நீதித்துறையில் அனுபவம் இருப்பதால் அந்த மரபு தமக்கு உதவியாக இருக்குமென்றும் அவர் கூறியுள்ளார்.

மைசூர்பருப்பில்

## 10 சத அதிக லாபம் 250 ரூபா அபராதம்!

[யாழ்ப்பாணம்]

மைசூர்ப் பருப்பை கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க 10 சதம் கூட்டி விற்றதாக குற்றஞ்சாட்டி தொடரப்பட்ட வழக்கில் யாழ். பழைய சந்தை வர்த்தகர் ஒருவருக்கு 250 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு யாழ்ப்பாணம் பதில் நீதவான் திரு. ஜிம்மி ராசரத்தினம் முன்னிலையில் நடைபெற்றது.

4 ரூபாவாக விற்கவேண்டிய மைசூர் பருப்பை 4 ரூபா 10 சதமாக விற்றதாக பழைய மார்க்கட் வியாபாரி ஒருவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

விலைக் கட்டுப்பாட்டு பொறுப்பாளர் திரு. என். சண்முகம் வழக்கை நடத்தினார். [க]

சங்கானைக் கொலை வழக்கு

# விசாரணை நடுவில் எதிரிகள் விடுதலை

(யாழ்ப்பாணம்)

சங்கானை கொலை வழக்கில் விசாரணை நடுவில் எதிரிகள் ஐவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு யாழ்ப்பாண மேல் நீதி மன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். ஜாமில் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 78-ம் ஆண்டு ஜூலை 7-ம் திகதி சங்கானையில் சின்னவன் புலேந்திரன், சின்னவன் மகேந்திரராசா அல்லது மணியம், சின்னவன் பாக்கியம் நாகன் கண்மணி, கணபதி ராசேந்திரன் ஆகியோர் சட்டவிரோதமான கூட்டத்தில் உறுப்பினராக இருந்ததாகவும், சரஸ்வதி செல்வராசாவை கொலை செய்ததாகவும், இன்னப்பு கணபதிக்கு காயம் விளைவித்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். ஈ. தம்பிரத்தினம், சட்டத்தரணி ஆர் ஜி. செல்வரத்தினம் ஆகியோர் ஆஜரானார்கள்: அரசதரப்பில் சட்டத்தரணி ஆர். தவராசா ஆஜரானார். [க]

## அரசுக்கு—

[1ம் பக்கத் தொடர்ச்சி]

செய்யப்பட்ட இவர்கள், மக்களுக்குச் செய்யவேண்டிய பொறுப்பை உணர்ந்து நடப்பார்களேயானால் கூட்டுறவுச் சங்கங்களில் ஊழல்களுக்கே இடமிருக்கமாட்டாது.

கூட்டுறவுச் சங்கக் கிளை முகாமையாளர்கள தமது கிளைகளை உரிய நேரத்தில் திறப்பதில்லை. இதனால் மக்கள மிகவும் கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள காலை 8-30 மணிக்கு கிளையைத் திறந்து மாலை 5-30 மணிக்கு கிளையை மூடவேண்டும். அப்படிச் செய்யத் தவறும் முகாமையாளர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இயக்குநர்சபை உறுப்பினர்கள் கிளைகளில் இருந்து செய்யப்படும் புகார்களுக்கோ கடிதங்களுக்கோ பதில் எழுதுவதுமில்லை; நடவடிக்கை எடுப்பதுமில்லை என அறிந்தேன்' அந்நிலை மாறவேண்டும் அனுப்பப்படும் கடிதங்களுக்கு ஒரு வாரத்திற்குள் பதில் அனுப்ப வேண்டும்.

கிளை முகாமையாளர்கள செய்யும் தவறினால் கூட்டுறவுத்துறைக்கு மட்டுமின்றி அதில் கடமைசெய்யும் உயர் அதிகாரிகளும் பாதிக்கப்படுகிறார்கள."

## கண்மணி மாதா உற்சவம்

[சாவகச்சேரி]

கிளாலி பரிசுத்த கண்மணி மாதா ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா இம்மாதம் 15ம் திகதி கொண்டாடப்படவிருக்கின்றது. இதற்கான ஆயத்த மாலை ஆராதனைகள் ஆரம்பமாகியுள்ளன. 14ம் திகதி இரவு விசேஷ ஆராதனைகளும் 15ம் திகதி காலை திருவிழா திருப்பலிப் பூசையும் திருச்சொரூபப்பவனியும் இடம்பெறும். மிருசுவில் பங்கு கட்டளைக்குரவர் வண பிதா. பற்றிக் ஞானப்பிரகாசம் அடிகளார் ஆராதனைகளை நடாத்துவார்.

## நெசவாசிரியருக்கு பாராட்டு விழா

[சாவகச்சேரி]

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நெசவு ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வுபெறும் நெசவு ஆசிரியர் திரு. இ. ஐயம்பிள்ளைக்கு சேவைநலம் பாராட்டி மேற்படி கல்லூரி ஆசிரிய சகோதரத்துவ சங்கத் தலைவர் திரு. வே அருணாசலம் தலைமையில் ஓர் பாராட்டு விழா நடைபெற்றது.

அதிபர் உட்பட திருவாளர்கள் ஏ பஞ்சாட்சரம், எஸ்: துரைராசா, கு. சங்கரப்பிள்ளை, அ. ஆறுமுகம் ஆகியோர் பாராட்டுரை வழங்கினார்கள்.

## நவீன சந்தை 2-வது கட்டிடம் 24ல் திறக்கப்படும்?

[யாழ்ப்பாணம்]

யாழ் நவீன சந்தையின் இரண்டாவது மாடிக்கட்டிடம் இம்மாதம் 24ந் திகதி திறக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

திறப்புவிழா மிகஎளிமையாக, யாழ் மாநகரசபை முதல்வர் திரு. இ. விசுவநாதனால் திறந்துவைக்கப்படவுள்ளதாக தெரிகிறது. [செ]

## கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

பண்டத்தரிப்புப் பிரிவு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் 13 கிளைகளிலிருந்தும் தெரிவான புதிய கிளைக்குழு உறுப்பினர்களுக்கு எதிர்வரும் ஞாயிறு காலை ஒருநாள் கருத்தரங்கு ஒன்றைக் கூட்டுறவுத் திணைக்களத்தினர் நடாத்தவுள்ளனர்.

இக்கருத்தரங்கில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அமைப்புமுறை, நோக்கங்கள் அதிகாரம், தொழிற்பாடுகள், கிளைக்குழுவின் பங்குகள், உபவிதிகள் என்பன பற்றி விளக்கவுரைகள் நிகழ்த்தப்படவுள்ளன. [கி-சு]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில்மேற்குவீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No: GB/8948/78 The Eelanadu P B No. 49. ITeegeram: Eelanadu. T.Phon: 389.